செ.வெ.எண்: 708/2016 நாள்: 08.10.2016

ஊ3/1345/2015 மாவட்டஆட்சியர்அலுவலகம்.
நாகர்கோவில்.

**பத்திரிக்கைசெய்தி**

பொது விநியோகத்திட்ட செயல்பாட்டில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கும், மக்களின் குறைகளை கேட்டு உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்வதற்கும், சிறப்பு முகாம்கள் 08.10.2016 இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் இராஜாக்கமங்கலம்துறை பகுதிக்கு இராஜாக்கமங்கலம் ஊராட்சி அலுவலகத்திலும் ,தோவாளை வட்டத்தில் செண்பகராமன்புதூர் பகுதிக்கு செண்பகராமன்புதூர் ஊராட்சி அலுவலகத்திலும், கல்குளம் வட்டத்தில் அழகியமண்டபம் பகுதிக்குவிலவூர்பேரூராட்சி அலுவலகத்திலும், விளவங்கோடு வட்டத்தில் தேங்காய்பட்டினம் பகுதிக்கு பைங்குளம் ஊராட்சி அலுவலகத்திலும் வட்ட வழங்கல் அலுவலர் தலைமையில் மக்கள் குறைதீர் முகாம் 08.10.2016 இன்றுகாலை 10.00 மணிமுதல் மதியம் 1.00 மணி வரை நடைபெற்றது. மக்கள் குறைதீா் முகாமில் குடும்ப அட்டையில் பெயர் நீக்கல்,சேர்த்தல்,பெயர் திருத்தங்கள், முகவரி மாற்றம், கடைமாற்றம் மற்றும் குடும்ப அட்டையில் திருத்தம் செய்வதற்கு அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் 49 மனுக்கள், தோவாளை வட்டத்தில் 14 மனுக்கள், கல்குளம் வட்டத்தில் 106 மனுக்கள், விளவங்கோடு வட்டத்தில் 81 மனுக்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டு அன்றைய தினமே அம்மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொண்டு பொதுமக்களின் குறைகளுக்கு தீர்வு காணப்பட்டது என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

ஓம் /- சஜ்ஜன்சிங் ரா சவான்
மாவட்டஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரிமாவட்டம்.
(இ) நாகர்கோவில்.

/உண்மைநகல் ஆணைப்படி/

மாவட்டஆட்சித்தலைவருக்காக

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.